முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2022 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2022-03-26
காலை
[9.00 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**கவனமாக வாசிக்கவும்**):**
  - (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் வருமானக் கூற்றின் கூறுகளைக் (elements) கொண்டுள்ள தொகுதி எது?

(1) சொத்துக்களும் பரிப்புக்களும்
(2) வருமானங்களும் செலவினங்களும்
(3) செலவினங்களும் உரிமையாண்மையும்
(4) வருமானங்களும் பரிப்புக்களும்

**1.2** "**சமன் டிரேடர்ஸ்** ரூபா 85,000/- பெறுமதியான பொருள்களை கடனடிப்படையில் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** விற்பனை செய்துள்ளது."

மேற்படி ஊடுசெயலைப் பதிவு செய்வதற்கு **சமன் டிரேடர்ஸினால்** வழங்கப்படும் சரியான மூல ஆவணம் (source document) எது?

(1) கொள்வனவு விலைப்பட்டியல்
(2) கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(3) விற்பனை விலைப்பட்டியல்
(4) வரவுக் குறிப்பு

**1.3** பின்வருவனவற்றுள் நடைமுறைச் சொத்திற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) வியாபாரக் கடன்கொடுத்தோர் (2) அட்டுறு மின்சாரம்

(3) வியாபாரக் கடன்பட்டோர் (4) வங்கிக் கடன்

**1.4** கீழ்வரும் தகவல்கள் தனியுடமை வியாபாரமான **நவீன் டிரேடர்ஸ்** இன் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா** |
|---|---|
| 2021 மார்ச் 31 இல் மொத்தச் சொத்துகள் | 2,400,000 |
| 2020 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 1,500,000 |
| ஆண்டின்போதான எடுப்பனவுகள் | 200,000 |
| 2021 மார்ச் 31 இல் பரிப்புக்கள் | 900,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் :

(1) ரூபா 2,200,000/-. (2) ரூபா 1,800,000/-.

(3) ரூபா 700,000/-. (4) ரூபா 200,000/-.

**1.5** **சொய்ஸா** என்பவர் ரூபா 300,000/- பெறுமதியான அலுவலக உபகரணங்களையும் ரூபா 500,000/- இனை காசாகவும் இட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார்.

மேற்படி ஊடுசெயல் தொடர்பில் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான சரியான தாக்கத்தை கீழ்வருவன வற்றிலிருந்து தெரிவுசெய்க.

| | **சொத்து (ரூபா)** | **=** | **மூலதனம் (உரிமையாண்மை) (ரூபா)** | **+ பரிப்பு (ரூபா)** |
|---|---|---|---|---|
| (1) | + 500,000 | = | + 500,000 | - |
| (2) | + 800,000 | = | + 800,000 | - |
| (3) | + 800,000 | = | + 500,000 | + 300,000 |
| (4) | + 200,000 | = | + 200,000 | - |

**1.6** பின்வருவனவற்றுள் எது பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது?

(1) அலுவலகப் பாவனைக்காக மோட்டார் வாகனமொன்றை கடன் அடிப்படையில் கொள்வனவு செய்தல்.

(2) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு, கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களைத் திருப்பியனுப்புதல்.

(3) அலுவலகப் பாவனைக்காக கணினி ஒன்றைக் காசுக்கு கொள்வனவு செய்தல்.

(4) கடன் அடிப்படையில் பொருள்களை விற்பனை செய்தல்

**1.7** பரிப்புக்களில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய ஊடுசெயலாக அமைவது :

(1) மோட்டார் வாகனமொன்றைக் காசுக்கு கொள்வனவு செய்தல்

(2) வியாபாரக் கடன்கொடுத்தோர் ஒருவரின் விலைப்பட்டியலைத் தீர்த்தல்

(3) வங்கியிடமிருந்து கடனொன்றைப் பெற்றுக்கொள்ளல்

(4) கடனடிப்படையில் பொருள்களை விற்பனை செய்தல்

**1.8** "வணிக உரிமையாளரின் தொலைபேசிக் கட்டணம் வணிகத்தினால் செலுத்தப்பட்டதுடன் அது வணிகத்தின் எடுப்பனவொன்றாகக் (drawing) கருதப்பட்டது"

மேற்படி செயற்பாட்டுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) அட்டுறு எண்ணக்கரு (2) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

(3) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு (4) உரிம (அலகுசார்) எண்ணக்கரு

**1.9** 2018 ஏப்ரல் 01 இல், ஒரு கம்பனி ரூபா 2,000,000/- இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. இது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்யப்படுகிறது. 2021 மார்ச் 31 இல் இயந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி (எழுதப்பட்ட பெறுமதி) :

(1) ரூபா 1,200,000/-. (2) ரூபா 800,000/-.

(3) ரூபா 1,600,000/-. (4) ரூபா 400,000/-.

**1.10** கீழ்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க :

(1) பரீட்சை மீதி இணக்கமானதாக (agree) இருப்பின், கணக்கேடுகளில் வழுக்கள் காணப்பட மாட்டாது.

(2) முன்னெச்சரிக்கை எண்ணக்கருவின்படி, தொக்குகள் கிரயத்தில் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அந்தப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன.

(3) பொதுப் பேரேடு ஒரு முதன்மைப் பதிவேடாக இருக்கிறது.

(4) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றானது வணிக உரிமத்தின் வங்கியினால் தயாரிக்கப்படுகிறது.

*கீழே* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.11** நேர்மை (Integrity) என்பது கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் ஒருவரால் பின்பற்றப்படும் ஒழுக்கநெறிக் கோவையின் ஒரு கோட்பாடாகும்.

**1.12** கொள்வனவு நாளேட்டில் ஒரு ஊடுசெயலைப் பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணம் வரவுக் குறிப்பு (debit note) ஆகும்.

**1.13** உரிமையாண்மை என்பது உரிமமொன்றின் சொத்துக்களிலிருந்து அதன் சகல பரிப்புக்களையும் (பொறுப்புக்களையும்) கழித்த பின்னர் அதன் சொத்துக்களில் எஞ்சியிருக்கும் பகுதியாகும்.

**1.14** செயற்கை நுண்ணறிவின் (AI) பிரயோகம் என்பது கணக்கீட்டுச் சூழலுக்கான சமூக மற்றும் காலாசார காரணியாகும்.

**1.15** ஒவ்வொரு வியாபாரக் கொடுக்கல் வாங்கலிலும் இரட்டை அம்சம் (dual aspect) காணப்படுகிறது.

**1.16** தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) மீதிக்கும் வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதிக்குமிடையில் வித்தியாசம் காணப்படுவதற்கான இரண்டு (02) சாத்தியமான காரணங்களைக் குறிப்பிடுக.

**1.17** கணக்கீட்டுச் செயன்முறையின் இரண்டு (02) கணக்கீட்டு வெளியீடுகளை நிரற்படுத்துக.

**1.18** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் இரண்டு (02) பிரதிகூலங்களை (குறைபாடுகள்) இனங்காண்க.

**1.19** ‘‘சொத்து’’ எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.

**1.20** கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் மாதத்திற்கான **அமீன் டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா** |
|---|---|
| 2021 மார்ச் 01 இல் வியாபாரச் சென்மதிகள் (கடன்கொடுத்தோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 475,000 |
| மாதத்திற்கான கொள்வனவு நாளேட்டு மொத்தம் | 1,250,000 |
| மாதத்திற்கான வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டு மொத்தம் | 125,000 |
| மாதத்தின் காலப்பகுதியில் வியாபாரக் கடன்கொடுத்தோருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | 600,000 |

2021 மார்ச் 31 இல் வியாபார சென்மதிகள் (கடன்கொடுத்தோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை இனங்காண்க.

(02 புள்ளி வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**ஷாம்** என்பவர் 2020 ஏப்ரல் 01 இல் ரூபா 3,000,000/- இனைக் காசாக முதலீடு செய்து **ஷாம் டிரேடர்ஸ்** என்ற தனியுடமை வியாபாரமொன்றை ஆரம்பித்தார். 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேடு) பொழிப்பு கீழ்வருமாறு :

**காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)**

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 3,000,000 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 2,200,000 |
| காசு விற்பனை | 2,000,000 | காசுக் கொள்வனவுகள் | 900,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டவை | 3,600,000 | சில்லறைக் காசு | 25,000 |
| | | மின்சாரம் | 25,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 1,000,000 |
| | | அலுவலக வாடகை | 350,000 |
| | | மோட்டார் வாகனக் கொள்வனவு (2020 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 1,500,000 |
| | | மீதி கீ.கொ.செ. | 2,600,000 |
| | **8,600,000** | | **8,600,000** |
| மீதி மு.கொ.வ. | 2,600,000 | | |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2021 மார்ச் 31 இல் வருமதிகள் மற்றும் சென்மதிகளின் மீதிகள் கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 750,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 440,000 |
| அட்டுறு மின்சாரம் | 6,500 |

(2) மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 25% இல் தேய்மானம் செய்யப்படுகின்றன.

(3) சில்லறைக் காசு கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வருமாறு :

**சில்லறைக் காசு கட்டுப்பாட்டுக் கணக்கு**

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 25,000 | அச்சிடலும் காகிதாதிகளும் | 4,500 |
| | | போக்குவரத்து | 8,000 |
| | | அலுவலகப் பராமரிப்பு | 6,500 |
| | | மு/கொ./வ. | 6,000 |
| | **25,000** | | **25,000** |

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இலான **ஷாம் டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

(A) 2021 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட ஸீனா கம்பனியின்** வங்கிக் கூற்றின்படியான சாதகமான மீதி ரூபா 306,500/- ஆனது காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேடு) வரவு மீதி (சாதகமானது) ரூபா 345,000/- உடன் இணங்கவில்லை.

வித்தியாசத்திற்கான காரணங்கள் கீழ்வருமாறு :

(1) 2021 மார்ச் 30 இல் கம்பனியால் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 75,000/- பெறுமதியான ஒரு காசோலை 2021 மார்ச் 31 இல் தேறியிருக்கவில்லை.

(2) 2021 மார்ச் 26 இல் வழங்கப்பட்ட கீழ்வரும் காசோலைகள் 2021 மார்ச் 31 இல் கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை :

| காசோலை இல. | தொகை (ரூபா) |
|---|---|
| 143346 | 28,000 |
| 143349 | 4,500 |

(3) 2021 மார்ச் 31 இல் வட்டி வருமானமாக ரூபா 6,500/- வங்கிக்கு நேரடியாகக் கிடைக்கப் பெற்றிருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(4) வங்கியானது 2021 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கட்டணமாக ரூபா 2,500/- இனைக் கழித்திருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு). (03 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(B) தனியுடமை வியாபாரம் ஒன்றின் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான ஐந்து (5) ஊடுசெயல்களின் தாக்கங்கள் கீழே உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | சொத்துக்கள் | | | = | உரிமையாண்மை (மூலதனம்) | + | பரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | தொக்கு | வியாபாரக் கடன்பட்டோர் | காசு | | | | வியாபாரக் கடன்கொடுத்தோர் |
| (1) | | | +1,000,000 | = | + 1,000,000 | | |
| (2) | + 600,000 | | | = | | | + 600,000 |
| (3) | (500,000) | + 600,000 | | = | + 100,000 | | |
| (4) | | | (400,000) | = | | | (400,000) |
| (5) | | | (50,000) | = | (50,000) | | |

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்படி (1) தொடக்கம் (5) வரையான ஒவ்வொரு உருப்படிக்குமான சாத்தியமான ஊடுசெயல்களை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**ரண்சிறி டிரேடர்ஸ்** என்பது தீந்தை தயாரிப்பில் ஈடுபடும் ஒரு கம்பனியாகும். 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ரண்சிறி டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப் பட்டுள்ளன :

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 2,771,000 |
| மூலப்பொருள் உள்வந்த வண்டிக்கூலி | 29,000 |
| நேர் கூலி | 920,000 |
| காப்புறுதி | 328,000 |
| தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம் | 900,000 |
| மின்சாரம் | 420,000 |
| தேய்மானம் - பொறி மற்றும் இயந்திரம் | 450,000 |
| தேய்மானம் - தொழிற்சாலைக் கட்டடம் | 180,000 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன : *(ரூபா)*

| விபரம் | 2020 ஏப்ரல் 01 இல் | 2021 மார்ச் 31 இல் |
|---|---|---|
| மூலப்பொருள் | 900,000 | 875,000 |
| புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 175,000 | 420,000 |

(2) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு பகிரப்பட வேண்டும் :

| செலவினம் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரம் | 80% | 20% |
| காப்புறுதி | 60% | 40% |

(3) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் உற்பத்திக் கிரயத்தில் 15% இலாப எல்லை வைத்து வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ரண்சிறி டிரேடர்ஸின்** உற்பத்திக் கிரயக் கூற்றைத் (உற்பத்திக் கணக்கைத்) **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

## வினா 05

**KTI டிரேடர்ஸ்** என்பது **அமல்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2021 மார்ச் 31 இலான **KTI டிரேடர்ஸின்** பரீட்சை மீதி இணங்காதிருந்ததுடன் வித்தியாசமானது தொங்கற் கணக்கிற்கு செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டு வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றுக்களின்படி, நிகர இலாபமாக ரூபா 2,250,000/- பதிவு செய்யப்பட்டது.

கீழ்வரும் வழுக்கள் பின்னர் இனங்காணப்பட்டன :

(1) 2021 மார்ச் 31 இல் ரூபா 335,000/- கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட அலுவலக உபகரணமொன்றின் கொள்வனவானது அலுவலக உபகரணப் பராமரிப்புக் கணக்கிற்கு வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டது. இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) 2021 ஏப்ரல் மாதம் செலுத்தப்பட்ட 2021 மார்ச் மாதத்திற்கான வாடகைச் செலவினம் ரூபா 80,000/- ஆனது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 95,000/- பெறுமதியான கொள்வனவு விலைப் பட்டியல் தொடர்பான பதிவுகள் கணக்கேடுகளில் முற்றாக விடுபட்டிருந்தன.

(4) விற்பனை நாளேட்டு மொத்தம் ரூபா 90,000/- இனால் குறைத்து பதியப்பட்டிருந்தது.

(5) வங்கியிலிருந்து கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் ரூபா 29,000/- வட்டி செலவினக் கணக்கில் வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டிருந்த அதே வேளை அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(6) மின்சாரச் செலவினம் ரூபா 145,000/- ஆனது மின்சாரச் செலவினக் கணக்கில் ரூபா 154,000/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் அதற்கான செலவுப் பதிவு (credit entry) சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சீராக்கப்பட்ட / திருத்தப்பட்ட நிகர இலாபத்தை **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

***சண்சைன் டிரேடர்ஸ்*** என்பது ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2021 மார்ச் 31 இலான ***சண்சைன் டிரேடர்ஸின்*** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**சண்சைன் டிரேடர்ஸ்**

**2021 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணியும் கட்டடமும் (காணியின் கிரயம் - ரூபா 6,000,000) | 16,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 2,800 | |
| அலுவலக உபகரணங்கள் | 900 | |
| 2020 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் : | | |
| கட்டடம் | | 2,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 600 |
| அலுவலக உபகரணம் | | 450 |
| விற்பனைகள் | | 125,000 |
| கொள்வனவுகள் | 76,000 | |
| வியாபார வருமதிகள் | 7,200 | |
| வியாபார சென்மதிகள் | | 3,200 |
| கையிலுள்ள காசு | 900 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 1,750 |
| 2020 ஏப்ரல் 01 இல் தொக்கு | 6,900 | |
| மின்சாரம் | 3,200 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 30,000 | |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 2,000 | |
| விளம்பரப்படுத்தல் | 4,000 | |
| செலுத்தப்பட்ட காட்சியறை வாடகை | 550 | |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 1,200 | |
| வங்கி மேலதிகப்பற்று மீதான வட்டி | 300 | |
| வங்கிக் கட்டணங்கள் | 50 | |
| 2020 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு | | 19,000 |
| | **152,000** | **152,000** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2021 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு ரூபா 7,200,000/-.

(2) **சண்சைன் டிரேடர்ஸ்** ஆனது 2021 சனவரி 01 இல் **வரையறுக்கப்பட்ட சிற்றி ரைடர்ஸ் கம்பனி** யிடமிருந்து கடன் அடிப்படையில் ரூபா 300,000/- இற்கு மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்தது. இது 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சண்சைன் டிரேடர்ஸின்** கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வியாபாரத்தின் கொள்கையானது பெறுமானத்தேய்வினை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் கீழ்வருமாறு செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | ஆண்டிற்கு 5% |
| மோட்டார் வாகனங்கள் | : | ஆண்டிற்கு 20% |
| அலுவலக உபகரணம் | : | ஆண்டிற்கு 20% |

(4) காட்சியறைக்கான வாடகை உடன்படிக்கையானது 2020 ஏப்ரல் 01 இல் ஒரு வருட காலத்திற்காகச் செய்து கொள்ளப்பட்டுள்ளது. மாதாந்த காட்சியறை வாடகை ரூபா 50,000/-.

(5) 2021 மார்ச் மாதத்திற்கான கீழ்வரும் செலவினங்கள் கணக்கேடுகளில் அட்டுறுவாகியிருக்கவில்லை :

| | | |
|---|---|---|
| மின்சாரக் கட்டணப்பட்டியல் | : | ரூபா 175,000/- |
| விளம்பரப்படுத்தல் | : | ரூபா 25,000/- |

(6) 2021 மார்ச் 31 இல் வியாபார வருமதிகள் மீதியை மதிப்பீடு செய்ததன் பின்னர், **சண்சைன் டிரேடர்ஸின்** உரிமையாளர் ரூபா 800,000/- மீதியை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்வதற்குத் தீர்மானித்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (12 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |